பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 11 2024 6 45
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் –

1. சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க புதிய குற்றவியல் சட்டங்கள் அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.
2. மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நித்தி ஆயோக் சார்பில் 15 நாட்கள் தண்ணீர் திருவிழா நாடு முழுவதும் இன்று தொடங்குகிறது.
3. கோவை மாவட்ட மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.
4. அரசு பள்ளி மாணவ மாணவிகள் வாசிப்பு பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.
5. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ பி எல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலம் இம்மாதம் 24, 25 தேதிகளில் சௌதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெறவுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

[]<<<>>>[]

தற்போதைய சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க புதிய குற்றவியல் சட்டங்கள் அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாடாளுமன்ற நிலைக்குழுக்களின் ஆய்வுக்குப் பின்னரே இந்த சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறினார்.,

75 ஆண்டுகால ஜனநாயகத்தில் மக்கள் நீதித்துறை மீது உறுதியான நம்பிக்கை வைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் சட்டப்பூர்வ நடைமுறைகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், ஜனநாயக விதிமுறைகளை வெளிநாட்டு பிரதிநிதிகள் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விஷயங்களில் இந்தியா உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் திரு ஓம் பிர்லா கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் 83 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் தண்ணீர் திருவிழாவை இன்று முதல் 15 நாட்களுக்கு நடத்த நித்தி ஆயோக் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஆண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற மாநில தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் அறிவித்த நதி-உற்சவம் தொலைநோக்கு திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்த திருவிழா கொண்டாடப்படுவதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

நீர்நிலைகளை பாதுகாத்தல், சிக்கன தண்ணீர் பயன்பாடு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த 15 நாள் திருவிழா நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஜல்ஜீவன் இயக்கம், மத்திய நீர்வளத்துறை உள்ளிட்டவை இந்நிகழ்ச்சிகளில் தங்களது பங்களிப்பை செலுத்தவுள்ளன.

[]<<<>>>[]

கோவை மாவட்ட மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக கோவை சென்றுள்ள அவர், திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

தமக்கு மக்கள் அளித்த வரவேற்பு மகிழ்ச்சி அளிப்பதாக என்று அவர் கூறினார்.

தங்க நகை தொழில்பூங்கா அமைப்பது உள்ளிட்ட இம்மாவட்ட மக்கள் அளித்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக தங்க நகை கைவினைஞர்கள் சங்க நிர்வாகிகள் சார்பில் கோரிக்கை மனு ஒன்றை முதலமைச்சரிடம் அளித்தனர்.

அவர்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில், கெம்பட்டி காலணி பகுதியில் தங்க நகை தயாரிக்கும் பொற்கொல்லர்களின் பட்டறைக்கு நேரில் சென்று திரு மு க ஸ்டாலின் பார்வையிட்டு, அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர் கோவை குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 23 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கான கட்டுமானப் பணிகளையும் முதலமைச்சர் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

கிராமப்புற மாணவர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காகவே ஊராட்சிகள் தோறும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் சட்டக்கல்லூரியில் நேற்று விளையாட்டு உபகரணங்களை வழங்கி பேசிய அவர், விளையாட்டுத்துறை மட்டுமல்ல மகளிருக்கான திட்டங்களையும் மாநில அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

நாட்டிலேயே 13 துறைகளில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று மத்திய அரசு பாராட்டு தெரிவித்திருப்பதையும் திரு உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை மேலும் வலுப்படுத்தும் வகையில் கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், அனைத்துத் தரப்பு மக்களுக்குமான கொள்கைகளை காங்கிரஸ் கட்சி கொண்டிருப்பதாகக் கூறினார்.

இளைஞர்களை அதிக அளவில் கட்சியில் சேர்க்க நிர்வாகிகள் செயலாற்ற வேண்டுமென்றும் திரு செல்வப்பெருந்தகை கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

அரசு பள்ளி மாணவ மாணவிகள் வாசிப்பு பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியை ஆய்வு செய்த பின்னர் மாணவ மாணவிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

கல்வி சார்ந்த நடவடிக்கைகளுடன் மாணவிகள் விளையாட்டிலும் தனித்திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் அரசு பள்ளி மாணவிகள் வெற்றிபெறும்போது, அந்த பள்ளிக்கு பெரிய அளவிலான அங்கீகாரம் கிடைப்பதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்துக்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை 146 நாட்களுக்கு தண்ணீர் இருப்பு மற்றும் நீர் வரத்தைப் பொறுத்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் இரண்டாயிரத்து 756 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள கோடியக்கரை பறவைகள் சரணாலத்திற்கு ஏராளமான வெளிநாட்டுப் பறவைகள் வரத் தொடங்கியுள்ளன.

இந்த பறவைகளை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க ஏதுவாக கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.,

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) – 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

உலகின் முதலாவது மரத்தாலான செயற்கைக்கோளை ஜப்பான் முதல் முறையாக விண்வெளியில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

காச நோயை முற்றிலுமாக ஒழிக்கும் இந்தியாவின் முயற்சிக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா – நைஜீரியா இடையேயான தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தை நேற்று புதுதில்லியில் நிறைவடைந்தது.

**[]<<<>>>[]**

ஓய்வூதியதாரர்கள் டிஜிட்டல் முறையில் வாழ்நாள் சான்றிதழை வழங்கும் மூன்றாம் கட்ட திட்டத்தை மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில புதிய காவல்துறை தலைமை இயக்குநராக திரு சஞ்ஜய் குமார் வர்மாவை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

**[]<<<>>>[]**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்று வரும் கந்தசஷ்டி விழாவின் நான்காம் நாளான நேற்று 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஜெயந்திநாதர் சுவாமிக்கு வைர வேல் சாத்தப்பட்டது.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறை மாவட்டத்தில் துலா உற்சவ கடைமுக தீர்த்தவாரியையொட்டி மாவட்டத்திற்கு வரும் 15-ஆம் தேதி உள்ளூர் முறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் தாழையூத்து அருகே பாலியல் வன்கொடுமை செய்து சிறுவன் கொலை செய்யப்பட்ட வழக்கில் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டவருக்கு மரணம் வரை ஆயுள் தண்டனை வழங்கி நெல்லை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**[]<<<>>>[]**

தருமபுரியில் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அது தொடர்பான போட்டிகள் நடத்தப்பட்டன.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் சத்யமங்கலம் அருகே உள்ள பண்ணாரி அம்மன் கோவிலில் உண்டியல் காணிக்கையாக ஒரு கோடியே மூவாயிரம் ரூபாய் கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் தொழிற்சாலை மற்றும் வீட்டு உபயோக பராமரிப்புக்கு உதவிடும் ரசாயன பொருட்கள் தயாரித்தல் தொடர்பான செய்முறை பயிற்சி வரும் 13-ஆம் தேதி முதல் மூன்று நாட்கள் நடைபெறும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ பி எல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலம் இம்மாதம் 24 மற்றும் 25-ஆம் தேதிகளில் சௌதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெறவுள்ளது.

சென்ற ஆண்டு ஐ பி எல் போட்டிகள் துபாயில் நடைபெற்றதைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக வெளிநாட்டில் இதற்கான ஏலம் நடைபெறுவதாக பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

இதில் ஆயிரத்து 165 இந்திய வீரர்களும், 409 வெளிநாட்டு வீரர்களும் பல்வேறு அணிகள் மூலம் ஏலத்தில் எடுக்கப்பட உள்ளதாகவும் பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சென்னையில் நேற்று தொடங்கிய சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி, சக நாட்டு வீரரான விதித் குஜராத்தியை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் நாட்டின் **Maxime vachier lagrave** , ஈரானின் **Parham maghsoodloo**-வை வென்றார்.

***<u>End of News</u>***